**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 80/2021

பெயர் – கருப்பசாமி(வா.சா.1)

நாள் – 12.06.2026.

**<u>2 முதல் 4, 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் சொத்து பிரச்சனை செய்து வருகிறார், அதனை எதிர்த்து இந்த வழக்கை தொடுத்துள்ளேன். வழக்கு சொத்து எத்தனை அயிட்டங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இரண்டு அயிட்டங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. தபசில் சொத்தானது ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் மாரிமுத்து(எனது தாத்தா என்பவருக்கு)விற்கு பாத்தியப்பட்டது. மாரிமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதற்குரிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.1 ஆகும்.

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1ல் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதில் சர்வே எண் கிடையாது, வெறும் பத்திர பதிவு மட்டும் செய்யப்பட்டுள்ளது. மாரிமுத்து தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். மாரிமுத்துவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான்கு பேர், மூன்று ஆண்கள், ஒரு பெண் ஆகியோர் ஆவார். மேற்கண்ட நால்வருக்கு நடுவே பாகப்பிரிவினை எதுவும் செய்யப்படவில்லை என்றால் வாய்மொழியில் நடைபெற்றது. ஆவணம் முறையில் பாகப்பிரிவினை எதுவும் நடைபெற்றதா என்றால் இல்லை.

மேற்படி வாரிசுகளுக்கிடையே வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்றும், வழக்கிற்காக அவ்வாறு நடைபெற்றது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தபசில் சொத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து வாய்மொழியாக வாங்கினேன் என்று பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

தற்போது எனக்கு என்ன வயது என்றால் 45 ஆகும். வழக்கு தாக்கல் செய்யும் போது எனக்கு என்ன வயது என்றால் 40 வயது இருக்கும். பிராதில் 30 ஆண்டுகளாக தபசில் சொத்தை அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ள நிலையில்

எனக்கு 10 வயது இருக்கும் போதே வழக்கு சொத்து எனக்கு வழங்கப்பட்டதா என்றால் எனது மாமா(1ம் பிரதிவாதி) வாய்மொழியாக எனக்கு தந்துவிட்டார். 1ம் பிரதிவாதி முத்தையா பெயரிலேயோ, எனது பெயரிலேயோ எந்த ஒரு அனுபவம் சார்ந்து ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தபசில் சொத்து அரசு புறம்போக்கு நிலம் என்பதால் தான் தபசில் சொத்து குறித்த அனுபவம் சார்ந்து ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்து காளியம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ளது என்றால் சரியல்ல. தபசில் சொத்திற்கும் காளியம்மன் கோவிலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தோராயமாக 2 கிலோமீட்டர் இருக்கும்.

தபசில் சொத்து அரசு புறம்போக்கும் நிலம், நான் அதை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக 2 முதல் 8 பிரதிவாதிகள் இருக்கன்குடி காவல் நிலையத்தில் 2021ம் ஆண்டு புகார் அளித்துள்ளனர் என்றால் என் மீது புகார் அளிக்கவில்லை என் அப்பா மீது DSP ஆபிசில் புகார் அளித்துள்ளனர். அந்த புகாரின் பேரில் நான் ஆஜரானேன் என்றால் சரிதான். (சாட்சி முதலில் ஆஜரானேன் என்று சொல்லிவிட்டு மறுத்துரைத்து சுமங்கலி மண்டபத்தில் இருக்கன்குடி போலீசார் தன்னை அழைத்து சென்றதாக கூறுகிறார்).

ஆக்கிரமிப்பு தொடர்பாக வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் சாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆக்கிரமிப்பு செய்தது குறித்தும், அதை அகற்ற கோரி வந்த கடிதம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சங்கதி குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றும், அவ்வாறு தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 முதல் 8 பிரதிவாதிகள் ஊர் நிர்வாகிகள் என்றால் சரிதான். 2 முதல் 8 பிரதிவாதிகள் சொன்னதன் பேரில் 9ம் பிரதிவாதி எனக்கு அனுப்பிய அறிவிப்பு வா.சா.ஆ.2 என்றால் சரிதான். 2021ம் ஆண்டில் உள்ள நாட்டாமை மற்றும் பிறநிர்வாகிகளும் நான் அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் தான் மேற்கூறிய அறிவிப்பை அவர்களது பொறுப்பிற்கு ஏற்ப 9ம் பிரதிவாதி மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல.

தபசில் சொத்தானது காலியிடமாக தான் உள்ளது என்றால் சரியல்ல, செட் போட்டு கால்நடைகளையும், எனது டிராக்டரையும் வைத்துள்ளேன். மேற்கூறிய சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தபசில் சொத்து தற்போது வரை காலியிடமாக தான் உள்ளது என்றும், அரசு புறம்போக்கு என்பதால் அது அனைவரின் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்றும், வழக்கிற்காக அனுபவித்து வருகிறேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(10, 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**